<u>மகளிர் அமர்வு நீதிமன்றம், மதுரை</u>

முன்னிலை திரு.G. நாகராஜன். பி.ஏ.,பி எல்.,
அமர்வு நீதிபதி,
மகளிர் அமர்வு நீதிமன்றம், மதுரை

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ஆம் நாள் வியாழக்கிழமை,

**<u>அமர்வு வழக்கு எண்.30/2024</u>**

(திருப்பரங்குன்றம் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.96/2013)

**<u>(CNR.No.TNMD01-000685-2024)</u>**

| | | |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | : காவல் ஆய்வாளர், திருப்பரங்குன்றம் அனைத்து மகளிர் காவல் நிலையம், மதுரை. |
| 2. | எதிரியின் பெயர் | : 1. பழனிராஜன், த/பெ.கனகராஜ், 16, காயத்ரி நகர் 3வது தெரு விரிவாக்கம், திருப்பாலை, மதுரை.<br>2. கனகராஜ் **(**இறப்பு**)**<br>3. பழனியம்மாள், க/பெ.கனகராஜ் **(**இறப்பு**)** |
| 3. | எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் | : எதிரியின் மீது பிரிவு 498(A), 307 மற்றும் 323 இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. |
| 4. | எதிரிகளின் பதில் | : குற்றவாளி இல்லை |
| 5. | நீதிமன்றத்தின் முடிவு | : குற்றவாளி அல்ல |
| 6. | நீதிமன்றத்தின் தீர்ப்பு | : முடிவில், எதிரியின் மீதான பிரிவு 498(A), 307 மற்றும் 323 இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால், எதிரி பிரிவு 498(A), 307 மற்றும் 323 இதசவின் கீழ் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.<br>இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.<br>எதிரி கொடுத்த பிணை முறி ஆணையானது |

மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் ரத்து செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 7. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : திருமதி.C. லதா சாந்தி, சிறப்பு அரசு வழக்கறிஞர் |
| 8. | எதிரிதரப்பு வழக்கறிஞர் | : திரு.G. கேசவன் |

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர் : 1. பழனிராஜன், த/பெ.கனகராஜ்
2. கனகராஜ் **(**இறப்பு**)**
3. பழனியம்மாள், க/பெ.கனகராஜ் **(**இறப்பு**)**

புகார்தாரரின் பெயர் : காவல் ஆய்வாளர், திருப்பரங்குன்றம் அனைத்து மகளிர் காவல் நிலையம், குற்ற எண்.96/2013

| வ. எண் | குற்றம் சாட்டப்பட்டவர் காவலில் இருந்த காலம் | காவலில் வைத்த நாள் | பிணையில் விடப்பட்ட நாள் | சிறையில் இருந்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | பழனிராஜன், த/பெ.கனகராஜ் | --- | 22.10.2013 | முன்ஜாமீன் |
| | கனகராஜ் **(**இறப்பு**)** | --- | 22.10.2013 | முன்ஜாமீன் |
| | பழனியம்மாள், க/பெ.கனகராஜ் **(**இறப்பு**)** | --- | 22.10.2013 | முன்ஜாமீன் |
| 2. | புகார் கொடுத்த தேதி | 06.10.2013 | | |
| 3. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான தேதி | 22.08.2018 | | |
| 4. | குற்றம் சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | 06.05.2024 | | |
| 5. | பல்வகை மனுக்கள் | தாக்கல் தேதி | தீர்வு தேதி | |
| | | --- | --- | |
| 6. | சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை செய்த தேதி | முதல் விசாரணை செய்த தேதி | குறுக்கு விசாரணை செய்த தேதி | |
| | அ.சா.1 இராஜேஸ்வரி | 09.03.2026 | 09.03.2026 | |
| | அ.சா.2 லெட்சுமிலதா | 23.03.2026 | 23.03.2026 | |

7. குற்றம் சாட்டப்பட்டவரை
குவி.மு.ச.பிரிவு 313 ன்கீழ் கேள்வி கேட்ட தேதி — 25.03.2026

8. எதிரி தலைமறைவான விவரம் மற்றும் வாரண்டில் பிடித்த அல்லது சரண்டரான தேதி

| | பிடி கட்டளை பிறப்பிக்கப்பட்ட நாள் | பிடி கட்டளை திரும்பப் பெறப்பட்ட நாள் |
|---|---|---|
| | --- | --- |

9. மேலமை நீதிமன்றத்தின் தடை ஏதேனும் இருப்பின் அதன் விவரம் --- ---

இந்த வழக்கானது 25.03.2026ம் தேதி என் முன் இறுதியாக விசாரணைக்கு வந்ததில், அரசு தரப்பில் திருமதி.C. லதா சாந்தி, சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திரு.G. கேசவன், வழக்கறிஞர் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களையும் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலணை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றப் பரிசீலணையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்பு

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :

**1.** இவ்வழக்கின் வாதியான திருமதி.இராஜேஸ்வரி 1வது எதிரியின் மனைவி. 2 மற்றும் 3 வது எதிரிகள் 1வது எதிரியின் பெற்றோர். வாதி மற்றும் 1வது எதிரியின் விருப்பத்தின் பேரில், இருவீட்டாரின் சம்மதத்துடன் 2004ம் வருடம் வாதியின் பிறந்த ஊர் அமைந்துள்ள ஆந்திர மாநிலத்தில் வைத்து திருமணம் நடைபெற்றதாகவும், அப்போது வாதியின் வீட்டார் சார்பில் 50 பவுன் தங்க நகைகள் சீராக கொடுக்கப்பட்டதாகவும், திருமணத்திற்கு பிறகு இரண்டு ஆண் குழந்தைகள் அடுத்தடுத்து பிறந்த நிலையில், வாதியும் 1வது எதிரியும் நிரந்தரமான வேலை அமையாததால் இருவரையும் வாதியின் குடும்பத்தினர் சைனாவிற்கு அனுப்பி 2007ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரை டாக்டர் படிப்பு படிக்க வைத்து, அதற்கான செலவு ரூ.50 லட்சத்தையும் வாதியின் குடும்பத்தினரே ஏற்றுக்கொண்டு, 2 ஆண் குழந்தைகளையும் பராமரித்து வந்ததாகவும், பின்பு படிப்பு முடிந்து இருவரும் நாடு திரும்பியதாகவும், 2 மற்றும் 3 வது எதிகளின் வேண்டுகோளின் பேரில் 1வது எதிரியும், வாதியும் இரண்டு ஆண் குழந்தைகளுடன் மதுரையில் உள்ள 2 மற்றும் 3வது எதிரிகள்

குடியிருந்து வரும் வாடகை வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்ததகாவும், மதுரைக்கு வந்த பிறகு வாதி மதுரை வடமலையான் மருத்துவமனையிலும், 1 வது எதிரி மதுரை அப்பல்லோ மருத்துவமனையிலும் டாக்டர்களாக வேலை பார்த்து வந்ததாகவும், 2 மற்றும் 3 வது எதிரிகள் 1 வது எதிரியை தூண்டிவிட்டு வாதியின் சம்பளத்தை முழுமையாக தரக்கேட்டும், வாதியின் தகப்பனாரிடம் கூறி தனியாக மருத்துவமனை கட்டித் தரக்கேட்டும் பல்வேறு சமயங்களில் 1 வது எதிரி வாதியை அடித்தும், திட்டியும் மனஉளைச்சலுக்கு உள்ளாக்கியதாகவும், 03.10.2013 ம் தேதி இரவிலும், 04.10.2013 ம் தேதி காலை 07.30 மணியளவிலும் வாதியை வீட்டிற்குள் வைத்து 1 மற்றும் 3 வது எதிரிகள் சேர்த்து அடித்தும், 1 வது எதிரி வாதியின் தலைமுடியை பிடித்து சுவரில் முட்ட வைத்து, அடுப்பங்கரையில் இருந்த பொருட்களை எறிந்து, காலால் மிதித்து துன்புறுத்தியதாகவும், அப்போது 2 வது எதிரி அவர்களை தடுக்காமல் உடந்தையாக இருந்ததாகவும், 1 மற்றும் 3 வது எதிரிகள் வாதியை படுக்கையறைக்கு இழுத்துப் போய் மரக்கட்டில் மெத்தை மீது தள்ளிவிட்டு 3 வது எதிரி 1 வது எதிரியிடம் "இவளை கொல்லுடா, உனக்கு ஒரு பணக்கார பொம்பளையை பார்த்து கல்யாணம் செய்து வைக்கிறேன்" என்று கூறி ஒரு போர்வையை எடுத்து கொடுத்ததாகவும், 1 வது எதிரி அந்த போர்வையால் வாதியின் முகத்தில் மூடி அமுக்கியதாகவும், 3 வது எதிரி வாதியை எழுந்துவிடாமல் இருக்க கால்களை அமுக்கியும் கொலை செய்ய முயற்சித்ததாகவும், வாதிக்கு காயங்கள் ஏற்படுத்தியதாகவும், 1 வது எதிரியின் மீது பிரிவு 498(A), 307 இதசவின் கீழும், 2 மற்றும் 3 வது எதிரிகளின் மீது பிரிவு 498(A), 307 இதச மற்றும் 1 முதல் 3 எதிரிகளின் மீது பிரிவு 498(A), 307 உ/இ 34 இதசவின் கீழான குற்றம் புரிந்துள்ளனர் என திருப்பரங்குன்றம் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் எதிரிகளுக்கு எதிராக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** அரசு தரப்பில் 2 வது எதிரி திரு.கனகராஜ் 08.09.2022 ம் தேதியும், 3 வது எதிரி திருமதி.பழனியம்மாள் 02.08.2020 ம் தேதியும் இறந்து விட்டதாக மேற்படி எதிரிகளின் இறப்புச் சான்றிதழானது 27.12.2023 ம் தேதி நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**3.** இந்த வழக்கானது, முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.13/2023 ஆக கற்றறிந்த நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம் அவர்களால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி முன்னிலைபட்டவுடன், குவிமுச 207 வது பிரிவின்படி வழக்கு

ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு, இவ்வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்க குற்றம் என்பதனால், மேல்விசாரணைக்காக மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு குவிமுச 209(அ) பிரிவின் படி அனுப்பப்பட்டு, 18.01.2024-ம் தேதியன்று அமர்வு வழக்கு எண்.30/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் பெண் என்பதால், விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையானவுடன், அரசு தரப்பில் ஆஜரான அரசு சிறப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆகியோர்களின் வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், எதிரியின் மீது பிரிவு 498(A), 307 மற்றும் 323 இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து எதிரிக்கு எடுத்துக் கூறி வினவியபோது எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்தார்.

**4.** எனவே, இவ்வழக்கில் எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும்பொருட்டு அரசு தரப்பில் பட்டியலில் காண்பிக்கப்பட்டிருந்த 11 சாட்சிகளில், 2 சாட்சிகள் மட்டும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சாட்சிப் பொருட்களாக எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சி சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக அறிய வரும் அரசு தரப்பு வழக்கானது ::</u>

**(i)** இவ்வழக்கின் வாதி திருமதி.இராஜேஸ்வரி அசா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அசா.1க்கு தமிழ் பேசத் தெரியும், எழுத படிக்கத் தெரியாது. கடந்த 2004ம் ஆண்டு அசா.1க்கும், அவரது கணவருக்கும் ஆந்திராவில் வைத்து திருமணம் நடைபெற்றது. கடந்த 2007-2012 வரை சீனாவில் தங்கி அசா.1ம், அவரது கணவரும் MBBS படிதது வந்தனர், அசா.1 வடமலையான் மருத்துவமனையிலும், அசா.1ன் கணவரும் சந்தோசமாக குடும்பம் நடத்தி வந்தனர். அவர்களின் வேலைபளுவின் காரணமாக சிறுசிறு முரண்பாடுகள் ஏற்பட்டதால், அசா.1ன் கணவர் கோவித்துக்கொண்டு அவரது பெற்றோர் ஊருக்கு சென்றுவிட்டார். பலமுறை அசா.1 போன் செய்தும் அசா.1 உடன் சேர மறுத்தவிட்டதால், அசா1ன் கணவர் தன்னோடு சேர்ந்து வாழவேண்டும் என்று காவல்நிலையத்தில் போன் கூறினார். அங்குள்ள

போலீசார் எழுதிக் கொடுத்ததில் கையொப்பம் போட்டார். அதில் உள்ள விபரங்கள் பற்றி படித்துப் பார்க்க தெரியாது. புகாரினை எழுதிய நபரும் படித்துக் காண்பிக்கவில்லை. புகார் மனுவில் அசா.1ன் கையொப்பம் மட்டும் அதசாஆ.1. அசா.1ன் கணவரும், அவரது பெற்றோரும் அசா.1ம் வரதட்சணை எதுவும் கேட்கவில்லை, அசா.1ஐயும் கொலை முயற்சியோடு தாக்கவில்லை.

**(ii)** அசா.2 திருமதி.லெட்சுமிலதா, கடந்த 2013ம் ஆண்டு மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்த போது, 06.10.2023ம் தேதி 22.00 மணிக்கு பெண் சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற GDP / 5389 / SP MD / 13-ன் படி மதுரை மாவட்டம் அய்யர் பங்களாவைச் சேர்ந்த அசா.1 கொடுத்த அதசாஆ.2 புகாரினைப் பெற்று, பார்வையிட்டு, நிலைய குற்ற எண்.96/2013, பிரிவு 498(S), 307 இதசவின் படி வழக்கு பதிவு செய்து, அசல் புகார் மனு மற்றும் அதசாஆ.3 முதல் தகவல் அறிக்கையை இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கு அறிக்கையான விபரத்தை மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, கிடைக்கப்பெற்ற அறிவுரைப்படி இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா அவர்கள் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 07.10.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வி மற்றும் கருப்பையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அதசாஆ.4 பார்வைமகஜர், அதசாஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளின் கையொப்பம் பெற்று, காலை 09.00 மணிக்கு சம்பவ வீட்டின் படுக்கையறை கட்டில் மெத்தையின் மீது காணப்பட்ட கொலை முயற்சிக்கு பயன்படுத்தப்பட்ட ராமர் பச்சை நிற உல்லன் போர்வை ஒன்றை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் அதசாஆ.6 அத்தாட்சியில் கைப்பற்றி சாட்சிகளின் கையொப்பம் பெற்று, சாட்சிகள் அசா.1, ஆதிநாராயணன், ராஜேந்திரன், டாக்டர்.சிவகாமி, செல்வி, கருப்பையா ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா அவர்கள் இத்துடன் தனது முதற்கட்ட விசாரணையை முடித்துள்ளார்.

மேற்படி வழக்கு கோப்பை அசா.2 தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டபோது, அது ஏற்கனவே முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் அவர்கள் தயார் செய்திருந்த பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் உள்ளது போலவே சரியாக இருந்ததால், தனியாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை, சாட்சிகளை விசாரணை செய்த போது, ஏற்கனவே விசாரணை செய்த சார்பு ஆய்வாளரிடம் சொன்னது போலவே சொன்னதால் தான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் 1வது எதிரி டாக்டர் பழனிவேல், 2வது எதிரி கனகராஜ் மற்றும் 3வது எதிரி பழனியம்மாள் ஆகியோர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்றுள்ளதாகவும், பின்னர் சாட்சிகள் டாக்டர்.அம்புஜம், ரமேஷ், காயம்பட்ட புகார்தாரர் ராஜேஸ்வரிக்கு மருத்துவ சிகிச்சை அளித்து அதசாஆ.7 காயச்சான்று வழங்கிய மருத்துவர் ஷாலினி மற்றும் பெண் சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அசா.2ன் புலன் விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் எதிரிகளின் மீது குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் காணப்பட்டதால், வழக்கின் புலன் விசாரணையை முடித்து 11.01.2014ம்தேதி எதிரிகளின் மீது பிரிவுகள் 498(A), 307 இதசவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**6.** இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டது.

**7.** இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகளைப் பற்றி எதிரிக்கு எடுத்துக்கூறி கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன்கீழ் விசாரிக்கப்பட்டபோது, எதிரி, தானும் தன் மனைவியும் இரண்டு ஆண் குழந்தைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வருவதாகவும், அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பொய் என்றும் மறுத்தார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனக் கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

**8. பிரச்சினை**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், எதிரியின் மீதான பிரிவு 498(A), 307, 323 இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

## தீர்வு :

**9.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் தனது வாதத்தை முன்னிலைப்படுத்தும்போது எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு இந்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள், தொடர்புடைய சான்றாவணங்கள் மற்றும் புலன்விசாரணை மூலமாக இந்நீதிமன்றம் ஊநிறைவு அடையத்தக்க வகையில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

**10.** இதற்கு மாறாக கற்றறிந்த எதிரி தரப்பு வழக்குரைஞர் தனது வாதத்தை முன்னிலைப்படுத்தும்போது, அரசு தரப்பு முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிய சான்றாவணங்கள் அரசு தரப்பு வழக்கை வலுப்படுத்துவதாக இல்லை என்றும், விசாரிக்கப்பட்ட சாட்சியங்களில் எதிரியையும், குற்றச்சாட்டுக்களையும் இணைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் ஏதும் தெரிய வரவில்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சாட்சியங்களின் மூலமும், ஆவணங்களின் மூலமும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எதிரி அந்த குற்றத்தை செய்யவில்லை என்று அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் மாறுபாடாக மெய்ப்பித்துள்ளார். எனவே எதிரி மீதான குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படை முகாந்திரமே இல்லை என்றும் எனவே எதிரியை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

**11.** இந்த வழக்கானது, 1வது எதிரி பழனிராஜனுக்கும், வாதிக்கும் கடந்த 2004ம் ஆண்டு ஆந்திர மாநிலத்தில் உள்ள வாதியின் ஊரில் திருமணம் நடைபெற்று, இரண்டு ஆண் குழந்தைகளுடன் வாழ்ந்து வந்ததாகவும், வாதியும் 1வது எதிரியும் நிரந்தரமான வேலை அமையாததால், வாதியின் குடும்பத்தினர் இருவரையும் சைனாவிற்கு அனுப்பி வைத்து, இருவரையும் டாக்டர் படிப்பு படிக்க வைத்து படிப்பிற்கான செலவினையும், குழந்தைகளையும் பார்த்து வந்ததகாவும், படிப்பு முடிந்து இருவரும் திரும்பி வந்த போது, 2 மற்றும் 3வது எதிரிகளின் வேண்டுகோளின் பேரில் இருவரும் குழந்தைகளுடன் மதுரையிலுள்ள 2 மற்றும் 3வது எதிரிகளின் வாடகை வீட்டில் கூட்டுக்குடும்பமாக இருந்து வந்ததாகவும், மதுரைக்கு வந்த பிறகு வாதி மதுரை வடமலையான் மருத்துவமனையிலும், 1வது எதிரி மதுரை அப்பல்லோ மருத்துவமனையிலும் டாக்டர்களாக வேலை பார்த்து வந்ததாகவும், 2 மற்றும் 3வது எதிரிகள் 1வது எதிரியை தூண்டிவிட்டு வாதியின் முழு சம்பளத்தை தரக்

கேட்டதாகவும், வாதியின் தந்தையிடம் தனியாக மருத்துவமனை கட்டித் தரக் கேட்டதாகவும், பல்வேறு சமயங்களில் 1வது எதிரி வாதியை அடித்து, திட்டி மனஉளைச்சலுக்கு ஆளாக்கியதாகவும், 03.10.2013ம் தேதி இரவிலும், 04.10.2113ம் தேதி காலை 07.30 மணியளவிலும் 1 மற்றும் 3வது எதிரிகள் சேர்ந்து அடித்ததாகவும், 1வது எதிரி வாதியின் தலைமுடியை பிடித்து சுவரில் முட்ட வைத்ததாகவும்,அடுப்பாங்கரையில் இருந்த பொருட்களை எறிந்து, காலால் மிதித்து துன்புறுத்தியதாகவும், 2வது எதிரி 1வது எதிரியின் செயலை தடுக்காமல் உடந்தையாக இருந்ததாகவும், 1, 3 எதிரிகள் வாதியை படுக்கையறைக்கு இழுத்துக்கொண்டு போய் மரக்கட்டில் மெத்தை மீது தள்ளிவிட்டு, 3வது எதிரி 1வது எதிரியிடம் இவளைக் கொல்லுடா உனக்கு ஒரு பணக்கார பொம்பளையைப் பார்த்து கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று கூறி போர்வையை எடுத்துக்கொடுத்ததாகவும், 1வது எதிரி அதனை வாங்கி வாதியின் முகத்தில் மூடி அமுக்கியதாகவும், 3வது எதிரி வாதியின் கால்களை அமுக்கி பிடித்து கொலை செய்ய முயற்சி செய்ததாகவும், 1வது எதிரியின் மீது பிரிவு 498(A), 307 இதசவின் கீழும், 2 மற்றும் 3வது எதிரிகளின் மீது பிரிவு 498(A), 307 இதச மற்றும் 1 முதல் 3 எதிரிகளின் மீது பிரிவு 498(A), 307 உ/இ 34 இதசவின் கீழான குற்றம் புரிந்துள்ளனர் என திருப்பரங்குன்றம் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் அவர்களால் எதிரிகளுக்கு எதிராக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்த வழக்கில் அரசு தரப்பில் மொத்தம் 11 சாட்சிகளில், இவ்வழக்கின் வாதி அ.சா.1 அரசு தரப்பையொட்டி சாட்சியம் அளிக்காத நிலையில், அரசு உதவி வழக்குரைஞரால் ஏனைய சாட்சிகள் விலக்கப்பட்டு, இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்ட அதிகாரி அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி இவ்வழக்கின் வாதியான அ.சா.1ன் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிப்பதற்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு, நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருக்கின்றார்.

**12.** இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியைத் தவிர, எதிரியின் மீதான குற்றச்சாட்டை பொறுத்து வேறு எந்த சாட்சியமும் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே எதிரியின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது. இவ்வழக்கின் வாதி அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அசா.1 தனது சாட்சியத்தில், எதிரி வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாகவும், தன்னை அடித்து கொலை முயற்சி

செய்ததாகவும் சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக வேலை பளுவின் காரணமாக தனக்கும் தன் கணவருக்கும் சிறுசிறு முரண்பாடுகள் ஏற்பட்டு, தன் கணவர் கோவித்துக்கொண்டு அவரது பெற்றோர் சென்றுவிட்டதாகவும், பலமுறை தான் போன் செய்தும் தன்னோடு சேர மறுத்துவிட்டதால், தன் கணவர் தன்னோடு சேர்ந்து வாழவேண்டும் என்று காவல்நிலையத்தில் போய் கூறியதாகவும், அங்குள்ள போலீசார் எழுதிக்கொடுத்ததில் கையொப்பம் போட்டதாகவும், அதிலுள்ள விபரங்களைப் பற்றி தனக்கு படித்துப் பார்க்கத் தெரியாது என்றும், புகாரினை எழுதிய நபரும் படித்துக் காண்பிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் வாதியான பாதிக்கப்பட்டபெண் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது அரசு தரப்பை ஒத்துரைத்து சா ட்சியம் அளிக்கவில்லை.

**13.** இவ்வழக்கின் புகார்தாரரான அசா.1 எதிரிகள் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாகவும், தன்னை அடித்து கொலை முயற்சி செய்ததாகவும் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கின் வாதி எதிரியை சம்பவத்துடன் பிணைக்கத்தக்க வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவ்வழக்கின் வாதியான அ.சா.1 பிறழ்சாட்சியமாக அறிவிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அசா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அசா.2 அவரது சாட்சியத்தில், அ.சா.1 அளித்த அதசாஆ.2 ஆன எழுத்து மூலமான புகார் மனுவின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக சாட்சியமளித்திருக்கிற நிலையில், அ.சா.1 புகாரில் உள்ள தங்களது கையொப்பத்தை மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா.1, இவ்வழக்கின் அடிப்படை ஆதாரமான அதசாஆ.2 புகார் மனுவை ஒப்புக்கொள்ளவில்லை. எனவே அதசாஆ.2 ஆன புகார் மனுவானது கொடுக்கப்பட்ட விதமும், புகார் மனுவில் உள்ள சங்கதிகளும், புகார் மனுவும் ஐயப்பாடு எழும் நிலையில் இருப்பதாக தீர்மானிக்கப்படுகிறது. இவ்வழக்கின் அடிப்படை ஆதாரமான அதசாஆ.2 புகார் மனு அரசு தரப்பில் நிரூபிக்கப்படாததால், அரசு தரப்பு வழக்கு குறித்து ஐயப்பாடு எழும் நிலை உள்ளது என்று தீர்மானிக்கப்படுகிறது. இவ்வழக்கின் வாதியான அசா.1 எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கின் வாதியான பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு காயங்கள் ஏற்பட்டிருப்பது அதசாஆ.7 ன் மூலம் நிரூபிக்கப்பட்டிருந்தாலும், மேற்படி காயங்களானது எதிரியால் ஏற்படுத்தப்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை. அ.சா.2 ஆன புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்து, புலன் விசாரணை மேற்கொண்ட விதம் மட்டுமே

புலனாகிறது. எதிரியை குற்றச்சாட்டுகளுடன் பிணைக்கத்தக்க சாட்சியங்கள் இல்லை. எதிரியின் மீது உள்ள குற்றச்சாட்டுகளை தகுந்த வாய்மொழிச் சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் அரசு தரப்பில் கூறப்படுவது போல் தான் சம்பவம் நடைபெற்றது என்பதற்கு தகுந்த சாட்சியங்கள் இல்லை. எனவே, எதிரியின் மீதான பிரிவு 498(A), 307 மற்றும் 323 இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சாட்சியங்களின் மூலமும், ஆவணங்களின் மூலமும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. மாறாக, எதிரி அந்த குற்றத்தை செய்யவில்லை என்று அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் மாறுபாடாக மெய்ப்பித்துள்ளார். எனவே, அந்த சந்தேகத்தின் பலனை அடைய எதிரி தகுதியுடையவர் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. அந்த சந்தேகத்தின் எதிரிக்கு அளித்து எதிரி பிரிவு 498(A), 307 மற்றும் 323 இதசவின் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவில் எதிரியின் மீதான பிரிவு 498(A), 307 மற்றும் 323 இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரி பிரிவு 498(A), 307 மற்றும் 323 இதசவின் கீழான குற்றச்சாட்டுக்களின் கீழ் குற்றவாளி அல்ல என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

எதிரி கொடுத்த பிணை முறி ஆணையானது மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் ரத்து செய்யப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தர் அவர்களிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் பதிவு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் வியாழக்கிழமையாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

NAGARAJAN

Digitally signed by NAGARAJAN
Date: 2026.04.02 17:10:06 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் அமர்வு நீதிமன்றம்,
மதுரை.

**<u>பின் இணைப்பு :</u>**

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் ::</u>**

அ.சா.1 இராஜேஸ்வரி

அ.சா.2 லெட்சுமிலதா

**<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> : இல்லை**

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள்</u> :**

| | | |
|---|---|---|
| அ.த.சாஆ.1 | 06.10.2013 | புகார் மனுவில் உள்ள புகார்தாரரின் கையொப்பம் |
| அ.த.சாஆ.2 | 06.10.2013 | புகார் மனு |
| அ.த.சாஆ.3 | 06.10.2013 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சாஆ.4 | 07.10.2013 | பார்வை மகஜர் |
| அ.த.சாஆ.5 | 07.10.2013 | மாதிரி வரைபடம் |
| அ.த.சாஆ.6 | 07.10.2013 | அத்தாட்சி |
| அ.த.சாஆ.7 | 27.11.2013 | காயச்சான்று |

**<u>எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் :</u> இல்லை**

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றுப் பொருட்கள்:</u> இல்லை**

**<u>எதிரி தரப்பு சான்று பொருட்கள்:</u> இல்லை**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.02 17:10:16 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் அமர்வு நீதிமன்றம்,
மதுரை.

மகளிர் அமர்வு நீதிமன்றம், மதுரை
**அமர்வு வழக்கு எண். 30/2024**
தீர்ப்புரை
நாள் : 02.04.2026